**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் நாள் செவ்வாய்க்கிழமை

***<u>இ.ம.எண். 342/2021 In அசல் வழக்கு எண்: 119/2020</u>***

S.P. திலகவதி ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனம்மாள்
2. S.P. சரவணன் (இறந்துவிட்டார்)
3. சங்கமித்திரை ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4. சுதா நந்தினி
5. சுதர்ஷன் ... 4,5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் இறந்துவிட்ட 2ஆம் பிரதிவாதியின் வாரிசுகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பா.சரவணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.டி.ஜானகி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தரப்பில், இறந்து போன 2ம் பிரதிவாதிக்கு இந்த 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டு அவர்களை அசல் வழக்கில் 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளாக சோத்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4ன் கீழ் தாக்கல் செய்த மனு.

**<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இந்த 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், 4, 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியவர்கள் என்றும், மனுதாரர் அசல் வழக்கினை நிரந்தர உறுத்துக் கட்டளைக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த 2ம் பிரதிவாதி கடந்த 02.05.2021 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துவிட்ட 2ம்

பிரதிவாதியின் மனைவி அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியாக உள்ளார் என்றும், இறந்துவிட்ட 2ம் பிரதிவாதியின் மற்ற வாரிசுகளான அவர் மகன் மற்றும் மகளான 4, 5 எதிர்மனுதாரர்கள் 2ம் பிரதிவாதியின் வாரிசாக அங்கீகாரம் செய்து அசல் வழக்கில் அவர்களையும் தரப்பினராக சேர்த்து கட்டுபடுத்தி தீர்ப்பு பெற வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது என்றும், இல்லையெனில் மனுதாரருக்கு வீண் கஷ்டமும், நஷ்டமும் உண்டாகும் என்றும், ஆகையால் அசல் வழக்கில் இறந்துவிட்ட 2ம் பிரதிவாதியின் வாரிசுகளாக 4, 5ம் எதிர்மனுதாரர்களை அங்கீகாரம் செய்து அசல் வழக்கை மேல் நடத்த கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. 1, 3 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடிக்குரியது என்றும், மனுதாரர் தனது அபிடவிட்டில் இந்த 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி கடந்த 01.05.2021 அன்று இறந்துவிட்டார் என்பதும், அவரது மனைவி அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியாக உள்ளார் என்பதும், 2ம் பிரதிவாதியின் வாரிசுகள் 4, 5 எதிர்மனுதாரர்கள் முறையே மகள் மற்றும் மகன் என்பதும் உண்மை என்றும், மனுதாரர் தனது அபிடவிட்டில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்த 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி சரவணனின் தாயார் என்பதையும், அவர் ஏற்கனவே வழக்கில் உள்ளார் என்பதையும் சொல்லவில்லை என்றும், இந்த மனுதாரர் இந்த மனுவுடன் 2ம் எதிர்மனுதார்/2ம் பிரதிவாதியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த எதிர்மனுதாரர் தான் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள அம்சங்களை தவிர அபிடவிட்டிலுள்ள பிற அம்சங்களை குறிப்பாகவும், திட்டவட்டமாகவும் மறுக்கிறார் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிரதிவாதி 01.05.2021 அன்று

இறந்துவிட்டதாகவும், மேற்படி பிரதிவாதிக்கு இம்மனுவின் 4, 5 எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகரித்து அசல் வழக்கில் 4, 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த 4, 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும், இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமாக அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 31.08.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.